.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
அசல் வழக்கு எண்.132/2015
Connected with
அசல் வழக்கு எண்.169/2019

PW1 – ராமலிங்கம், த/பெ தங்கராசு
நாள்–28.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

2–ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் நடேசன் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி தகப்பனாரும் எனது தகப்பனாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் தெரியாது. என்னுடைய பூர்வீகம் அனுமந்தபுரம் என்றும் தாவா சொத்து கிராமத்தில் வந்து குடியேறிவிட்டோம் என்றால் சரியல்ல. நான் பிறந்து வளர்ந்ததே தாவா சொத்து கிராமத்தில்தான். சுமார் 60 வருடத்திற்கு முன்பு அனுமந்தபுரம் கிராமத்தில் இருந்து வந்து எனது தகப்பனார் தாவா கிராமத்தில் குடியேறினார் என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயர் ரங்கசாமி என்றால் சரிதான்.

1960–ல் நடேசனும், தங்கராசும் தாவா கிராமத்தில் வந்து குடிறேனார்கள் என்றும் நடேசன் தான் கிரயம் பெற்ற சொத்தில் சகோதரர் என்பதற்காக தங்கராசுக்கு குடியிருக்கு அனுமதி வழங்கினார் என்றால் சரியல்ல. வாதியின் வீடும், பிரதிவாதியின் வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். எனது தகப்பனார் எங்கள் வீட்டை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் அரசாங்கம் கொடுத்த பட்டாப்படி அனுபவித்து வருகிறார். எந்த வருடம் பட்டா வழங்கப்பட்டது என்றால் 13.10.1986–ம் வருடம் ஆகும் இரண்டு தாவா சொத்துக்களையும் அளவீடு செய்தால் யார் ஆக்கிரமித்து உள்ளார் என்ற விபரம் தெரியவரும் என்றால் ஏற்கனவே எங்கள் சொத்தை பொறுத்துநீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்யப்பட்டு அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் அசல் வழக்கு எண்.169/2019–ல் நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு எங்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இதே பிரதிவாதிகளின் மீது ஏற்கனவே அசல் வழக்கு எண்.148/2014 தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடியாகியுள்ளது என்றால் அளவீடு செய்வதற்காக தாக்கல்

செய்திருந்தோம். இதே பிரதிவாதிகள் மீது ஏற்கனவே அசல் வழக்கு எண்.148/2014 தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடியாகிவிட்ட நிலையில் மேல்முறையீடு தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், புதிதாக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.132/2015 நிலைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல.

எங்கள் சொத்து அளவீடு செய்யத போதே பிரதிவாதிகளின் சொத்தையும் அளவீடு செய்து இருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அளவீடு செய்யதபோது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பத்திரங்களை நில அளவையரிடம் கொடுத்தும் அவர் அளவீடு செய்ய மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பட்டா என்பது உரிமை மூலத்தை நிரூபிக்க கூடிய ஆவணம் என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 03.07.2014–லேயே 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை காலி செய்து சுவாதீனம் வழங்க கோரி சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பி அனுப்பாமல் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது தகப்பனாரும் 2–ம் பிரதிவாதியின் தகப்பனாரும் சகோதரர்கள் என்பதால்தான் 2–ம் பிரதிவாதியின் தகப்பனார் அனுமதியின்பேரில் குடியிருக்க எனது தகப்பனாருக்கு இடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நடேசனுக்கு தெரியாமல் எனது தகப்பனார் பெற்ற பட்டா செல்ல தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.132/2015 தள்ளுபடி செய்தும் அசல் வழக்கு எண்.169/2019–ஐ தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>